OS: 269/2019

Date: 11.08.2025

பெயர் : வெங்கடேசன்

<u>பிரதிவாதி தரப்பு சாட்சி **1.**</u>

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

1. எனது தகப்பனாரும் வாதியின் பெரியப்பாவும் தாவா சொத்துக்களை ஒரு ஐயர் குடும்பத்தினரிடமிருந்து தான் கிரையம் பெற்றார்கள் என்றால் எனது தகப்பனார் ஐயர்குடும்பத்தினரிடமிருந்து வாங்கினார், வாதியின் பெரியப்பா முதலியார் குடும்பத்தினரிடமிருந்து வாங்கினார். வாதியின் பெரியப்பாவிற்கு கிரையம் கொடுத்த முதலியார் பெயர் தெரியுமா என்றால் மாரியப்ப முதலியார். எனது தகப்பனார் எந்த ஐயர் குடும்பத்தினரிடமிருந்து சொத்துக்களை விலைக்கு வாங்கினாரோ அதே ஐயர் குடும்பத்தினரிடமிருந்துதான் மாரியப்ப முதலியாரும் சொத்துக்களை வாங்கினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. எனது தகப்பனார் பி.வா.சா.ஆ.1 சொத்தை கடந்த 15.05.1968ம் ஆண்டு சீனிவாசன், எஸ்.கே.நாகராஜன், ஜெயம்மாள், நாகமணியம்மாள், நரசிம்மன் ஆகியோருரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆவணத்தை மாரியப்ப முதலியாரும், பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை கிரையம் எழுதி கொடுத்த மேற்படி 5 நபர்களிடமிருந்து தான் கிரையம் பெற்றிருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் கிரையம் பெறுவதற்கு முன்பே 04.02.1968ம் ஆண்டு அதே ஐயர் குடும்பத்தினரிடமிருந்து கிரையம் பெற்றார்கள் என்றால் ஆமாம், ஆனால் அது வேறு சொத்து, அதன் சர்வே எண் வேறு, எங்களது சர்வே எண் வேறு.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்து விவரத்தில் சர்வே எண் 387/2ல் வடபுற ரோடு சவுரியத்திற்காக விடப்பட்ட 46 செண்ட் நீங்கலாக என்று எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. 46 செண்ட் எங்களுக்கு கிரையம் கொடுத்த நிலம் ஆகும். எனது தகப்பனார் மாரியப்பன் ஐயர் குடும்பத்தினரிடமிருந்து கிரையம் பெற்ற விவரத்தை தெரிந்து தான் கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் சரியல்ல. சர்வே எண்.387/2 என்ற வழக்கு சொத்து தடம் என்றாலும், அதனை நான் இல்லை என்று மறுக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. சர்வே எண்.387/2 எங்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க ஆவணம் எதாவது தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆமாம். சர்வே எண்.387/2 என்பது சர்வே எண்.387/2Aவாக மாறிவிட்டது. சர்வே எண் 387/2A என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் ஆமாம். அந்த **பட்டா வா.சா.ஆ.15** ஆகும். ஆனால் அந்த ஆவணத்தில் கண்ட பெயர்களை நீக்கச்சொல்லி ஆர்.டி.ஓ விடம் மனு தாக்கல் செய்து பெயர் நீக்க உத்தரவம் பிறப்பிக்கபட்டுவிட்டது. பெயர் நீக்கம் செய்யப்பட்டுவிட்டது என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. ஆனால் இப்போது கேட்டால் தாக்கல் செய்கிறேன்.

5. என்னிடம் காட்டப்படும் பட்டா 11.08.2025ம் தேதி 11.00 மணிக்கு எடுக்கப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். ஆனால் பெயர் மாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் இன்றுவரை பெயர் மாற்ற உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புல வரைபடத்தில் உள்ள சர்வே எண்.387/2A என்பது தடமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. வருவாய் துறை ஆவணங்களில் சர்வே எண்.387/2Aஆனது பாதையாக தான் பூஸ்துதியில் இருக்கிறது என்றாலும், மேற்படி பாதையை வாதிகள் பயன்படுத்தக்கூடாது என்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் கிரையம் பெற்ற பத்திரமான பி.வா.சா.ஆ.1லும் கூட எனது தகப்பார் 46 செண்ட் நிலத்தை தடமாக குறிப்பிட்டுதான் கிரையம் பெற்றிருக்கிறார் என்றால் ஆமாம், அதற்கு காரணம் ஐயர் குடும்பத்தாரிடமிருந்து வேறு ஒரு சர்வே எண்ணையும் கிரையம் பெற்றோம். எனவே அந்த பூமிக்கு செல்வதற்காக இந்த கிரைய பத்திரத்தில் பாதை என்று குறிப்பிட்டு கூறியிருக்கிறார் ஆனால் அது பாதை இல்லை.

7. நான் எனது ஆவணத்திற்கு விரோதமான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தடத்தை ஏற்கனவே எனது தகப்பனார் தாக்கல் செய்த வழக்கில் இந்த வாதிகள் பயன்படுத்துவதை தடுக்ககூடாது என்று தீர்ப்பு வாங்கியிருக்கிறார் என்றாலும், எனவே இந்த பாதையை வாதி பயன்படுத்துவதை தடுக்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தான் பொதுப் பாதையை கவனிக்காமல் கிரையம் வாங்கியிருக்கிறார் என்றாலும், அவர் கிரையம் வாங்கியதே தவறு என்றாலும் சரியல்ல.

8. இந்த 46 செண்ட் பாதை எங்களுக்கு பாதிக்கப்பட்டது என்று சொல்லி நான் நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல அதற்காகதான் ஆர்.டிஓ நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். யாருக்கு எதிரான வழக்கு தாக்கல் செய்தேன் என்பதையும் அதன் முடிவு என்னானது என்பதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம், கேட்டால் நான் இப்போதே தாக்கல் செய்கிறேன்.

9. என் தகப்பனார் தாக்கல் செய்த வழக்கு குறித்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அது சம்மந்தமாக பதில் உரையிலும் சொல்லவில்லை என்றாலும் சரிதான். உண்மை நிலவரம் வெளிபட்டுவிடும் என்பதால் நான் மறைத்து விட்டேன் என்றால் சரியல்ல. வழக்கு என் மீதும், குப்புசாமி மீதும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். குப்புசாமி என் மீது தடத்திற்காக பரிகாரம் கேட்டு ஓமலூர் உரிமையியல் நீதிமன்றதில் அ.வ.எண்.94/2023 என்ற வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் ஆமாம்.

10. அது சம்மந்தமான ஆவணங்களையும், விவரங்களையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி சட்டப்படி ஆவணத்தில் கண்டுள்ள தடத்தைதான் பரிகாரமாக கேட்டிருக்கிறார் என்றாலும் எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

(ஒப்பம்/-T.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.